RTROPNo. 139/2021 – 03.07.2025

CW2 – ராஜாமணி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் கோருநர் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆர்ஜிதம் செய்த நிலத்தின் பகுதியின் டிஎஸ். எண்.30/4 என்றால் சரி. டிஎஸ்.எண்.30/4 என்பது டிஎஸ்.எண்.30/1 லிருந்து பிரிக்கப்ட்டது என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணமும் டிஎஸ்.எண்.30/1க்கு சம்மந்தப்பட்டது என்றால் சரியல்ல. குறிப்பாக எந்த ஆவணத்தில் டி.எஸ்.எண்.30/1 நிலம் எனக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் Ex.C26–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. Ex.C29–ல் உள்ள டிஎஸ்.எண்.1117/3ல் ஏக்கர் 68 செண்ட் என்றும் டிஎஸ்.எண்.1118/3ல் 47 செண்ட்டும் அதன்பின்னர் டிஎஸ்.எண்.30/1 என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. டிஎஸ்.எண்.1117/3 மற்றும் டிஎஸ்.எண்.1118/3 இரண்டும் புதிய டிஎஸ்.எண்.30/1 ஆக மாற்றம் செய்யப்பட்டது என்பதற்கான வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களுமே டிஎஸ்.எண்.30/2, 30/3க்கு சம்மந்தப்பட்டது என்றும் நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட டிஎஸ்.எண்.30/1க்கு சம்மந்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

Ex.C1 ஆவணத்தில் 5.2.1968ல் சேலம் செட்டில்மெண்ட் தாசில்தார், சேலம் ஜாமியா மஜீத் மற்றும் எனது தந்தை செங்கோட கவுண்டர் ஆகியோரை விசாரித்து அதில் செங்கோட கவுண்டர் Ex.C29 ஆவணத்தை தனது தரப்பில் தாக்கல் செய்துள்ளார் என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது அப்பா தாக்கல் செய்த ஆவணத்தையே நான் தாக்கல் செய்யவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Ex.C1 உத்தரவில் 3வது பக்கத்தில் சேலம் செட்டில்மெண்ட தாசில்தார் Ex.C29 ஆவணம் செல்லாது என்று சொல்லி உள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. என் அப்பா அந்த உத்தரவின் மீது எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது.

Ex.C1 உத்தரவில் டிஎஸ்.எண். 30/1ல் 64 செண்ட் நிலத்தை ஜாமியா மஜீத்திற்கு ரயத்வாரி பட்டாவாக செட்டில்மெண்ட் தாசில்தார் வழங்கி உள்ளார் என்றால் சரியல்ல. 5.2.1968 முதல் நாளதுவரை நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலமான டிஎஸ்எண்.30/1–க்குரிய அனைத்து வருவாய் ஆவணங்களும் ஜாமியா மஜீத் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள Ex.C16 ஆவணம் டிஎஸ்.எண்.30/2, 30/3க்குதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். டிஎஸ்.எண்.30/1க்கு நான் டிஎஸ்எல்ஆர் ஆவணம் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. நில எடுப்பு அதிகாரியும் அவரது அறிவிப்பில் டிஎஸ்.எண்.30/1 நிலம் ஜாமியா மஜீத் பெயரில் உள்ளதாகதான் அறிவிப்பு வழங்கி உள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களுமே டிஎஸ்எண்–30/1க்கு அருகில் உள்ள டிஎஸ்.எண்.30/2, 30/3க்கு சம்மந்தப்பட்டது என்றால் சரியல்ல. 3 டிஎஸ்.எண்களுக்கும் சேர்த்துதான் கொடுத்துள்ளார். டிஎஸ்.எண்.30/1ல் எனக்கோ என் அப்பா செங்கோட கவுண்டருக்கோ என் அப்பாவிற்கு கிரயம் கொடுத்த நபர்களுக்கோ எந்த காலத்திலும் பாத்தியம் கிடையாது என்றால் சரியல்ல. டிஎஸ்.எண்.30/1 நிலம் முதல் கோருநருக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் நிலம் ஆர்ஜிதம் செய்யும் வரை அவர்தான் அனுபவத்தில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை முதல் கோருநருக்கு மட்டுமே கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,
Principal District Judge, Salem.